றேன். அதேபோல் போதுமான அளவுக்கு, தேவையான அளவுக்கு இந்த அரசு நிதி உதவி செய்ய இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன்.

*திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யம் பகுதியில் அனைத்து புகையிலை உற்பத்தி விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பெற்றிருக்கிற கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. காரணம், அவர்கள் உற்பத்தி செய்திருக்கிற புகையிலைக்குக் கட்டுபடியான விலை கொடுத்து கொள்முதல் செய்கின்ற முறை இல்லை. எனவே, கூட்டுறவுச் சங்கத்தில் எவ்வளவு விவசாயிகள் இருக்கிறார்கள் என்பது பிரச்னை அல்ல. அரசாங்கமே அவர்கள் விளைவிக்கின்ற புகையிலை அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல ஆலோசனைகள் பரிசீலிக்கப் பெறும்.

(ஈ) கூட்டுறவுக் கடன்கள் வசூலில் கெடுபிடி

திரு. ஒ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகாவிலுள்ள, செவரக்கோட்டை, கூத்தலூர் கிராமங்களில் சிறு விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் வீடு வாசல்களை ஜப்தி செய்தல், சாமான்களைப் பறிமுதல் செய்தல் போன்ற கெடுபிடிகளைச் செய்து வருவதால் அவர்களிடையில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, கூத்தலூர் கிராமம் கூட்டுறவு விவசாய வங்கியின் விவகார எல்லையிலுள்ள 32 கிராமங்களில் செவரக்கோட்டை மற்றும் கூத்தலூர் கிராமங்கள் உள்ளன. சங்கத்தில் 884 கடன் உறுப்பினர்கள் ரூ. 9.01 இலட்சம் சங்கத்திற்கு கடன் பாக்கி செலுத்த வேண்டியுள்ளது. இதில் 809 உறுப்பினர்கள் ரூ. 5.81 இலட்சம் தவணை கடந்த கடன் பாக்கி செலுத்த வேண்டியுள்ளது. இந்த 809 உறுப்பினர்களில் 624 சிறு விவசாயிகள் ரூபாய் 3.47 இலட்சமும், மற்ற 185 விவசாயிகள் ரூ. 2.34 இலட்சமும் செலுத்த வேண்டியுள்ளது.

1978 செப்டம்பர் 13] [திரு. மா. மீனுட்சிசுந்தரம்]

குறிப்பிட்டுள்ள இரண்டு கிராமங்களைப்பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு :—

	செவரக்கோட்டை.		கூத்தலூர்.	
	உறுப்பினர்கள்.	தொகை ரூ.	உறுப்பினர்கள்.	தொகை ரூ.
1. கடன் பாக்கி	41	50,000	123	1,02,000
2. மொத்த கடனில் தவணை தவறிய கடன்	40	27,000	115	78,000
3. (அ) கலம் (2ல்) உள்ள தவணை தவறிய கடன் பாக்கியில் சிறு விவசாயிகள் தவணை தவறிய கடன் பாக்கி.	30	14,000	96	57,000
(ஆ) இதர விவசாயிகளின் தவணை தவறிய கடன் பாக்கி	10	13,000	19	21,000

அரசின் கொள்கைப்படி, வசூலைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்து, தவணை தவறிய கடனளவு குறைக்கப்பட வேண்டும். வரும் பருவங்களில் தொடர்ந்து கடன் வழங்கவும் 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 140 கோடிக்கு குறுகியகால மற்றும் நடுத்தர கால கடன்கள் வழங்கும் குறியீட்டை எட்டவும் தாமதமின்றி கடன் வசூல் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். ஆயினும், சிறுவிவசாயிகள் விஷயத்தில் கடன் வசூலில் தீவிர நடவடிக்கை எடுக்கப்படமாட்டாதென அரசு தெளிவாக அறிவுறுத்தியுள்ளது.

செவரக்கோட்டை, கூத்தலூர் ஆகிய இரு கிராமங்களையும் உட்கொண்ட இராமநாதபுரம் மத்தியக்கூட்டுறவு வங்கி, 1978-79 ஆம் ஆண்டில் ரூபாய் 9 கோடி அளவுக்கு குறுகிய கால விவசாயக் கடன்கள் வழங்கத் திட்டமிட்டுள்ளது. இத்தொகையில் ரூ. 7.55 கோடி 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குமுன் வழங்கப்பட இருக்கிறது. ஆனால், தவணை தவறிய கடன்கள் வசூலிக்கப் படாமல், போதிய தவணைதவறாத கடன் அளவைப் பெறாத தால் (Non - Overdue Cover deficit) இத்திட்டப்படி செய்ய இயலாது. இந்திய ரிசர்வ் வங்கியின் ஆணைப்படி, போதிய தவணைதவறாத கடன் அளவை பெற்றிராத ஒரு வங்கி அதன் கடன் வரையறைகளிலிருந்து கடன் பெறமுடியாது, இச்சிக்கலைத் தவிர்க்க, இவ்வங்கி ரூ. 4.5 கோடி வழிவகை முன்பணமாக ஒதுக்கீடு செய்ய அரசை வேண்டியுள்ளது. ஆகவே கடனைத் திருப்பிச் செலுத்த இயலும் பெரு விவசாயிகளிடமிருந்து கடனை வசூல் செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

சிறு விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப் பெற வில்லை. அறிவிப்பில் குறிப்பிட்டபடி சம்பந்தப்பட்ட கிராமங் களில் எந்தவிதமான பதட்ட நிலையும் இல்லை.

திரு. ஒ. சுப்பிரமணியன் : என்னுடைய கேள்விக்கு நீண்ட விவரமான பதில் கொடுத்திருக்கிறார்கள். இதில் பெரிய விவசாயி களிடம்தான் வசூல் செய்யப்படுகிறது, சிறிய விவசாயிகளிடம் வசூல் செய்யப்படவில்லை யென்று கூறியிருக்கிறார்கள். இராமநாத புரத்திலே தொடர்ந்து 3 ஆண்டுகள் வறட்சியாகவும் சென்ற ஆண்டு புயலாலும் பாதிக்கப்பட்டது. ஆகவே, வறட்சி மாவட்டங்களாக தர்மபுரி, இராமநாதபுரம் போன்ற மிகப் பெரிய மாவட்டங்களிலே விவசாயிகளிடமிருந்து கடன் வசூல் செய்வதைத் தள்ளி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கிடுக்கிடி என்ற பகுதியிலிருந்து எனக்கு வந்த தந்தியை அமைச்சரவர் களிடம் கொடுத்திருக்கிறேன். அங்கு ஜப்தி கெடுபிடி நடந் திருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்பு விசலாயங்கோட்டையில் மறுநாள் தன்னுடைய மகளுக்குக் கல்யாணம் நடக்கப்போகிறது. ஆனால், முதல் நாள் ஜப்தி செய்ததாகத் தகவல் வந்திருக்கிறது. சில மாதங்களுக்கு முன்ப பச்சேரி என்ற ஊரிலே கீழ்த்தரமாக நடந்து கொண்டதனால், கூட்டுறவுக் கடன் கொடுக்கவேண்டியவர் தற்கொலை கூட செய்து கொண்டார் என்ற செய்தியை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அமைச்சர் அதை விசாரணைக்கு அனுப்பி இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே கடன் வசூலை அறவே நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல் அங்கே உள்ள சில நிலைமைகளைப் பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கனவே கடந்த 4 மாதங் களாக இப்படிப்பட்ட தகவல் அரசினுடைய கவனத்திற்கு வந்த பொழுதும் உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். அப்படி அருமை மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியன் அவர்கள் சொன்ன அந்தத் தகவலின் பேரிலே உரிய நடவடிக்கை எடுப் போம் என்பதை அவர்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

தவணை தவறிய அளவைக் குறைக்க சட்டபூர்வமான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்கிறதே தவிர, கெடுபிடி யிலோ, ஜப்தியிலோ இப்படிப்பட்ட காரியங்களில் இந்த அரசுக்கு நம்பிக்கை இல்லை. ஏதாவது அத்துமீறிய காரியங்கள் தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், உரிய முறையில் அரசானது நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.